Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.MC.No. 8 / 2024

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | ஜெயந்தி | Calling: | இல்லதரசி |
| Father's Name: | கணேஷ்பாபு | Religion: | |
| Village: | நியூடவுன் | Age: | 48 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 20.05.2025

ம.சா.1 குறுக்கு விசாரணை.

இவ்வழக்கில் நான் மனுதாரர் என்றால் சரிதான். எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஜீவனாம்சம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். என் வீட்டில் நான் தான் முதல் பிள்ளை என்றால் சரிதான், எனக்கு பின் 2 தங்கைகள் உள்ளனர். என் அப்பா, அம்மா உள்ளனரா என்றால் உள்ளனர். நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.A. Corporate Secretary Ship. Corporate Secretary Ship என்றால் ஒரு நிறுவனத்தை செயலாண்மை படுத்தும் படிப்பு என்றால் சரிதான். நான் படித்த படிப்பிற்கு வேலைக்கு சென்றால் மாதம் ரூ.60,000/- வரை வருமானம் வரும் என்றால் சரிதான். எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 21.08.2006. திருமணமான நாளில் இருந்து எங்கு வசித்து வந்தோம் என்றால் திருச்சி, தில்லை நகர் எதிர்மனுதாரருடன் வசித்து வந்தேன். எதிர்மனுதாரர் வீட்டில் வசித்து வந்தபோது எனக்கும் எதிர்மனுதாரருக்கும் தாம்பத்ய உறவு இல்லை என்றால் இருந்தது(நான் கர்ப்பம்தரிக்காத முறையில் இருந்தது). நான் இவ்வழக்கில் தாம்பத்ய உறவே இல்லை என்று கூறியிருந்தால் அது தவறு என்றால்

சரிதான். நான் தில்லை நகரில் இருந்தபோது அடிக்கடி எனக்கும் எதிர்மனுதாரருக்கும் அடிக்கடி தகராறு ஏற்படும் என்றால் இல்லை.

நான் திருமணத்திற்கு முன்பே ஒருவரை காதலித்ததாக கூறியதால் தான் எதிர்மனுதாரர் தாம்பத்ய உறவு வைத்துக்கொள்ளவில்லை என்றால் பொய், எதிர்மனுதாரருக்கும் எதிர் வீட்டு பெண்ணுக்கும் தொடர்பு இருந்ததால் தான் எதிர்மனுதாரர் குழந்தை வேண்டாம் என்று கூறினார். எதிர் வீட்டு பெண்மணிக்கு எதிர்மனுதாரரை விட அதிக வயது என்றால் சரிதான். நானும் எதிர்மனுதாரும் திருச்சியில் இருந்தபோது அடிக்கடி ஏற்பட்ட தகராறு காரணமாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் சரிதான், குழந்தை இல்லாததது சம்பந்தப்பட்ட பிரச்சனைக்காக புகார் அளித்தேன். நான் கொடுத்த புகாரின்பேரில் போஜினியம்மா பேரிலும் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். அது நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது என்றால் சரிதான். நான் மேற்படி கொடுத்த புகாரில் உள்ள சங்கதிகளை நீதிமன்ற விசாரணையில் நிரூபிக்கப்படாததால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். போலிசார் நீங்க உங்க அம்மா வீட்டிற்கு போங்க என்று கூறி என்னை அனுப்பி வைத்தனர். அதிலிருந்து நான் என் அம்மா வீட்டில் தான் இருக்கிறேன். வாணியம்பாடியில் இருந்ததால் நான் திருச்சி சென்று இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

நான் அதேபோல் திருச்சியில் ஒரு DVC வழக்கும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு எந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் வேலூர் மகளிர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. வாணியம்பாடியிலிருந்து திருச்சி சென்று தாக்கல் செய்த வழக்கு எதிர்மனுதாரரை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக தான் போட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் HMOP வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் வேலைக்கு சென்றால் வருமானம் ஈட்டி என் வாழ்க்கையை நான் பராமரித்துக்கொள்ள வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் தாம்பத்ய உறவு இல்லாத காரணத்தினால் அவருக்கு மனைவி என்ற தகுதி இல்லை என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து யாரிடமும் சொல்லாமல் நானே திருச்சியிலிருந்து வாணியம்பாடி வந்துவிட்டேன் என்றாலும் அதன் அடிப்படையில் எதிர்மனுதாரரிடம் நான் ஜீவனாம்சம் பெற தகுதி இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ஜெயந்தி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K